# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**தலைமைக் கழகம்**

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014
தொலைப்பேசி : 044 - 2848 1235

"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 15.09.2024

## தலைமைக் கழக செய்தி வெளியீடு

ஏழை, எளிய மக்களிடையே தன் பேச்சாற்றலால் அறிவுப்புரட்சியை உருவாக்கிய அற்புதத் தலைவர், எழுச்சிமிகு எழுத்தால் லட்சக்கணக்கான இளைஞர்களின் இதயங்களை கவர்ந்த புரட்சியாளர், தாய்நாட்டிற்கு தமிழ்நாடென்று பெயர் சூட்டிய தலைமகன் **பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாள்** இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி **கழக பொதுச்செயலாளர் திரு. டிடிவி தினகரன் அவர்களின் சார்பில்**, சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள **பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகே அமைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு** கழக துணை பொதுச்செயலாளரும், தென்சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான **திரு.G.செந்தமிழன்**, கழக அமைப்புச் செயலாளரும், மத்திய சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளருமான **திரு.V.சுகுமார்பாபு**, கழக மீனவர் அணி செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.T.ஆறுமுகம்**, கழக அமைப்புச் சாரா ஓட்டுநர்கள் அணி செயலாளர் **திரு.குட்வில் குமார்**, வடசென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.C.P.ராமஜெயம்**, வடசென்னை மேற்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.P.ஆனந்த்**, மத்திய சென்னை மத்திய மாவட்டக் கழக செயலாளர் **திரு.ஹாஜி K.முகமது சித்திக்,** கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.மன்ற இணைச்செயலாளர் **திரு.K.S.கோணேஸ்வரன்,** கழக அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி பொருளாளர் **திரு.பி.ஆர்.சாமி (எ) P.முனுசாமி** ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தலைமைக் கழகம்
அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்




இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக செயலாளர்கள், மாவட்டக் கழகம் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழகம் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தொண்டர்கள் என திரளானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**